(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7 (9).]

# பாராளுமன்றம்

## 7 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 நவம்பர் 30 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2017 திசெம்பர் 06, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2017 திசெம்பர் 09, சனிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், மதுபானம் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1000)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 2 ஆம் பிரிவின் கீழ், மதுவரி அறவிடத்தக்க பொருட்கள் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1001)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 3),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( 52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், எதனோல் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1002)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 4),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( 52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய 1943/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 981 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலை இரத்துச்செய்து நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவம்பர் 15 ஆம் திகதிய 2045/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1003)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ( 3 ) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ( 3 ) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 212/ '17

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விஜித பேருகொட

கௌரவ திளும் அமுணுகம

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ சிசிர ஜயகொடி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ பைசர் முஸ்தபாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை,— உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் இலங்கையின் உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளித்து, குறித்த ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளபோதும், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் உள்ளூரதிகார சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்குத் தவறியுள்ளதன் மூலம் இலங்கையின் சனநாயகத்திற்கு கடும் பாதிப்பொன்றை ஏற்படுத்தியுள்ளமையினாலும்;

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ பைசர் முஸ்தபா மீதான நம்பிக்கை முழுமையாக இல்லாதுள்ளமையினாலும் தொடர்ந்தும் அப்பதவியின் பணிகளைச் செய்வதற்கான இயலுமை தொடர்பில் நம்பிக்கையின்மை காணப்படுவதாக இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

---